1975 நவம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஒன்றும் கொடுக்கவில்லையே. பின் எப்படிப் பேசலாம்?

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை நிறுத்திவைத்து இதுகுறித்து விவாதிக்கவேண்டிய தேவை இல்லை என்று நான் கருதுவதால் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

(இ) ஆப்பக்கூடல் சக்தி சர்க்கரை ஆலையில் லே ஆஃப் மற்றும் ஆட்குறைப்பும், அதனால் ஏற்பட்ட விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள்.

"serious situation arising out of lay off and retrenchment of workers numbering thousands in the Appakoodal Sakthi Sugar Factory and continued harassment of senior workers resulting in crisis in the industry and the workmen and agriculturists generally and the unrest in these areas in Coimbatore district." என்று கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர, பொது முக்கியம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இந்த சக்தி க்ரூப்ஸில் இது ஒரு ரொம்ப முக்கியமான விஷயம். ஏற்கனவே இது பற்றி விவாதம் நடந்திருக்கிறது. இந்த சக்தி சர்க்கரை ஆலை தமிழ் நாட்டிலுள்ள மிகப் பெரியதொரு ஆலை. அந்த ஆலைக்கு கரும்பு சப்ளை செய்யக்கூடிய விவசாயிகளிடமிருந்து பலமுறைகளில் அந்த நிர்வாகம் பணம் வசூலிக்கிறது.

அந்த ஆலையில் ஆயிரத்திற்கு அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். நிரந்தரமான தொழிலாளர்களை லே ஆப்-ல் அனுப்புவதே கிடையாது. இப்போது அங்கு நிரந்தரமான தொழிலாளர்களைக்கூட லே ஆப்-ல் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கக்கூடிய ஸீஸன் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். இப்போது அவர்களை என்ன செய்கிறார்கள் என்றால்—நான்கைந்து ஆண்டுகள் சர்விஸான தொழிலாளர்களை நீங்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு லீவ்

எடுத்தீர்கள் காரணம் இல்லாமல் நீங்கள் லீவ் எடுத்திர்கள் என்றெல்லாம் ஏதோ காரணம் காட்டி மெமோ கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள்.

இந்தத் தொழிற்சாலேயைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டிலுள்ள எந்தவிதமான சட்டத்தையும் இவர்கள் மதிப்பதில்லே. எந்தவிதமான நடவடிக்கைகள் எடுத்தாலும் அதற்கு விரோதமாகத்தான் நடப்போம் என்ற முறையில், அரசாங்கம் எதுவுமே செய்யமுடியாது என்று பிடிவாதமாக இருக்கக்கூடிய ஒரு நிர்வாகம் இது. 9(எ)-படி நோட்டீஸ் போடுவார்கள், வேலேயை மாற்றுகிறேம் என்று. அப்படிப் போடும்போது இந்த வேலேயிலிருந்து மாற்றக்கூடாது என்று எல்லாச் சங்கங்களும் அரசாங்கத்திற்கு மனு செய்து கொள்வார்கள். பின்னர் பேச்சுவார்த்தை நடக்கும்.

ஆனல் இங்கு ஏற்பட்டது என்ன? பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் சர்க்காரில் நல்ல அனுபவம் பெற்ற ஒரு சீப் பாக்டரி இன்ஸ்பெக்டர் விசுவநாதன் என்பவர் போலீஸை வைத்துக்கொண்டு தொழிலாளர்களே நீங்கள் புதிய வேலேப்பளுவிற்கேற்ப வேலே செய்யவேண்டும் என்று சொல்கிருர். தெரிந்தால் ஐ.எல்.ஓ. இதைக் கண்டிப்பாக கண்டிக்கும். தமிழ் நாட்டில்தான் இந்தமாதிரி ஒன்று நடக்கிறது, போலீஸை வைத்துக்கொண்டு நிர்வாகம் வேலே வாங்குவது எனது அனுபவத்தில் சொல்கிறேன், சமீப காலத்தில் தமிழ்நாடு ஒன்றில்தான் இப்படி நடக்கிறது. ஒன்றரைக்கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது. எப்படி சக்தி பைப்ஸ் பற்றி பேச ஒரு சந்தர்ப்பம் ஒரு மசோதா மூலம் நமக்கு கிடைத்ததோ அதேமாதிரி இந்த சக்தி ஷுகர்ஸ் சம்பந்தமாகவும் விவாதிப்பது தமிழ்நாட்டுக்கும், தமிழ் நாட்டு மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் நல்லது என்றுதான் நான் அபிப்பிராயப்படுகிறேன்.

(முற்பகல் 10-30)

அவ்வளவு முக்கியமான விஷயமாக இருக்கின்ற காரணத்தால்தான், 1½ மணி அல்லது 2 மணி நேரம் விவாதிக்க சந்தர்ப்பம் கிடைத்தால் நாங்கள் சொல்வதை விட, ஆளும் கட்சியிலிருப்பவர்கள் நிறைய விவரங்களேக் கொடுத்து இந்த நிர்வாகத்தை

ஒன்று அரசு எடுத்து நடத்த வேண்டும் அல்லது அவர் களின் நிர்வாகத்தை கட்டுப்படுத்த வேண்டுமென்ற நிலேயை எடுப் பார்கள். இப்போது விவசாயிகளே எங்களுக்கு 1½ கோடி ரூபாய் கிடைக்கவில்லே என்று சொல்கின்ற நிலேமையும், தொழி லாளர்களுக்கு வேலே கிடைக்குமா இல்லேயா என்ற நிலேயும் இருக் கிறது. உலகத்திலேயே தொடர்ந்து இத்தனே நாள் வேலே செய் யாத தொழிற்சாலே என்ற பெயர் பெற்ற தொழிற்சாலே, இந்தத் தொழிற்சாலே, தமிழ் நாட்டில் இருக்கிறது. ஆகவே இந்த முக்கிய மான, அவசர நிலேக்கு உள்ளிட்டு இருக்கிற, மிக அவசியமான பிரச்னேயை விவாதிக்க இந்த சபையை ஒத்திவைத்து பேசவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலேவரவர்களே, சக்தி சர்க்கரை ஆலே, ஆப்பக்கூடல் என்னும் நிறுவனத்தில் சுமார் 1,149 தொழிலாளர்கள் வேலே செய்கின்றனர். கீழ்க்கண்ட தொழிற் சங்கங்கள் இந்நிறுவனத்தில் இயங்கி வருகின்றன.

1. சக்தி சர்க்கரை ஆலேத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், சக்திநகர்.

2. சக்தி சுகர்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன், சக்திநகர்.

29—9—75 அன்று நிர்வாகத்தினர் 350 தொழிலாளர்களே 30—9—75 பிற்பகல் முதல் ஆட்குறைப்பு செய்யப் போவதாகவும். மேலும் மற்ற எல்லாத் தொழிலாளர்களேயும் 1—10—75 முதல் மூன்று மாதத்திற்கு லே-ஆப் செய்யப் போவதாகவும் அறி வித்தனர். தொழிற்சாலேக்குத் தேவையான மூலப் பொருளான **கரும்புப் பற்றுக்குறையை முன்னிட்டு ஆட்குறைப்பு மற்றும் லே-** ஆப் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்தனர். ஆட் குறைப்பு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகையை தபால் மூலம் அனுப்பிவிட்டதாகவும் தெரிவித்தனர்.

நிர்வாகத்தினரின் மேற்கூறிய நடவடிக்கையை எதிர்த்து தொழிற்சங்கத்தினர் தொழிற் தகராறு எழுப்பினர். இத்தொழிற் **தகராறின்மீது கோவை மூன்றுவது வட்ட தொழிலாளர்துறை** அலுவலர் முன்பு 9—10—75 அன்று பேச்சு வார்த்தை நடைபெற்ற **தில் உடன்பாடு ஏற்படவில்லே.**

ஆட்குறைப்பு சம்பந்தமாக பேச்சு வார்த்தை கோவை, தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு நடைபெறவிருக்கிறது.

லே-ஆப் சம்பந்தமாக 24—10—75 அன்று என் முன்பு பேச்சு வார்த்தை நடைபெற்றது. அதன் பின்னர் இரு தரப்பினரையும் நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்துமாறு நான் ஆலோசனை கூறினேன். மீண்டும் 15—11—75 அன்று என் முன்பு லே-ஆப் பற்றி பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுவதால் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

(3) கவன ஈர்ப்பு

நெல்லிக்குப்பம் பாரீஸ் கன்பெக்ஷனரி மூடப்பட்டதும், தொழிலாளர் வேலை இழப்பும்.

THIRU V. KRISHNAMOORTHY: Sir, under Rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. Minister for Labour and Transport to a matter of urgent public importance, i.e., the closure of the Parry Confectionery at Nellikuppam for the past several months by the management and the loss of work for about 1,500 workers.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நெல்லிக்குப்பம் பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட் தொழிற்சாலையில் சுமார் 600 தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனர். இத்தொழிற்சாலையில் மிட்டாய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. வியாபார மந்த நிலையால் உற்பத்தியான பொருள்கள் விற்பனையாகாத காரணத்தைக் கூறி நிர்வாகத்தினர் 11—6—75 முதல் தொழிலாளர்களை வேலை வாய்ப்பில்லை என்று லே-ஆப் செய்தனர். அந்த நிலை நீடித்ததால் தொழிற்சாலையில் உற்பத்தி அளவையும், உற்பத்திச் செலவையும் குறைக்க அவசியம் ஏற்பட்டதென்ற காரணத்தைக் கூறி நிர்வாகத்தினர் 201 தொழிலாளர்களை 1975-ம் ஆண்டு ஜூலை 7 முதல் ஆட்குறைப்புச் செய்துள்ளதாக அறிவிப்புக்